JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | **2127/2024** |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 2** | Prosecution /Defence / Court | |
| Name | **parameswaran** | Village | Mullampatti, pudhupalayam |
| Father's Name | **perumal** | Taluk | Perundurai |
| | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 04.08.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். மனுதாரர் சிவகாமி முள்ளம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தார். அவர் அவதூறு வழக்கு கிருஷ்ணமூர்த்தி, மணிமேகலை, தினேஷ்குமார், சதீஷ்குமார், சண்முகசுந்தரம், சிவசுப்பரமணி, மகேந்திரன், துளசிமணி என்பவர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். 12.08.2020 ம் தேதி பஞ்சாயத்தில் நீதிமன்ற குடியிருப்பு பகுதியில் கழிவுநீர் வடிகால் வாரியம் அமைப்பதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 21.12.2020 ம் தேதி அன்று அதற்காக டென்டர் விடப்பட்டது. 2,30,000 மதிப்பீட்டில் மேற்படி பணி 2021ம் ஆண்டு நிறைவு பெற்று விட்டது. மேற்படி நபர்கள் மனுதாரர் சிவகாமியை கலங்கப்படுத்த வேண்டும்என்பதற்காக 07.10.2023 ம் தேதியன்று சன்டிவி, Face book, watsapp ல் 2,30,000 த்தை கையாடல் செய்து விட்டதாக அவதூறு பரப்பினார்கள். 09.10.2023 ம் தேதி காஞ்சிக்கோவில் காவல் நிலையத்திலும், மாவட்ட ஆட்சியரிடம், காவல் துறை கண்காணிப்பாளரிடமும் மனுதாரர் சிவகாமி புகார் கொடுத்திருந்தார். மனுதாரர் சிவகாமியை கலங்கப்படுத்த வேண்டும் என்று மேற்படி நபர்கள் கூட்டு சேர்ந்து அவதூறு பரப்பியுள்ளார்கள்.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை